# மெய்விரத மான்மியம்

மாநார்ஹம் மஹதாம் மஹா நட ஜடா பர்யந்த நிர்யந்த்ரண
க்ரீடா பந்துர ஸிந்து ராஜ மஹிஷீ ஜந்மாஸ்பதம் தத்பதம்
மாதங்காசல மௌளி மண்டன மணேர் வந்தாரு ப்ருந்தாரக
ஶ்ரேணீ ஶேகர பாரிஜாத கலிகா சூடால மீடாமஹே

1:##
வாழி அருளாளர், வாழியணி அத்திகிரி *
வாழி எதிராசன் வாசகத்தோர் * வாழி–
சரணாகதியெனும், சார்வுடன் மற்றொன்றை *
அரணாகக் கொள்ளாதார் அன்பு. (2)

2:
எண் திசையும் கடலேழும் மலைகளேழும் *
ஈரேழு வையகமும் படைத்து இலங்கும் *
புண்டரிகத்தயன் புணர்த்த பெரிய வேள்விப் *
புனித நறும் போக்கியத்தை உவந்து வந்து *
தொண்டையெனும் மண்டலத்தின் நடுவில் பாரில் *
தூ நில மெய்விரதத்துத் தோன்றிநின்ற *
கொண்டலருள் குணமே நாம் கூறுகின்றோம் *
கூர் மதியீர் குறிப்பாகக் கொண்மினீரே.

3:
வம்மின் புலவீர் அருளாளப் பெருமாளென்றும்* அருளாழி–
அம்மான் என்றும் * திருமகளைப் பெற்றும் என்னெஞ்சம் கோயில் கொண்ட*
பேரருளாளரென்றும் * வியப்பா விருதூதும்படி கரை புரண்ட,–
கருணைக்கடலை * இவ்வண்ணம் பேசுவீர்* ஈதென்ன பாங்கே.

4:
ஒன்றே புகலென்று* உணர்ந்தவர் காட்டத் திருவருளால் *
அன்றே அடைக்கலங்கொண்ட* நம் அத்திகிரித் திருமால் *
இன்றேயிசையின் இணையடி சேர்ப்பர்* இனிப் பிறவோம் *
நன்றே வருவதெல்லாம், நமக்கு பரமொன்றிலதே.

5:
வம்பவிழ் போதமர் மாதருகந்த* அம் மாநிதியைத் *
தன்பலமே கொண்டு* காணக் கருதிய தாமரையோன் *
முன்பல குற்றத்து* வல்வினை மொய்க்க முகிழ் மதியாய் *
அம்புலி வேண்டிய, பாலனைப் போல அழுதனனே.

6:
அடங்காக் கரணங்கள்* ஐந்துடன் ஆறும் அடக்கி முன்னம் *
நெடுங்கால மின்னிலமே* நிலையாப் பூண்டு நீடுறைவான் *
சடங்கால் பெரிய தவங்கள் செய்தேன்* என்ன தன்மை இதென்று *
இடங்காத்திருந்த* திசைமுகன் தன்னை இகழ்ந்தனனே.

7:
விண்ணுலகில் வீற்றிருந்த மேன்மையாலும் *
 வேதங்கள் ஈரிரண்டும் விரித்தலாலும் *
கண்ணனை நான் கருத்துறவே காண்பனென்னக் *
 காணுமல் விலக்கிய தன் வினையைக்காணு *
எண்ணிய நல் புவனங்கள் ஏழுமாறும் *
 இருமூன்று தீவமும் எட்டிடமும் விட்டுப் *
பண்ணிய நல்விரதமெலாம் பலிக்குமென்று *
 பாரதத்தில் பங்கயத்தோன் படிந்திட்டானே.

8:
எத்திசை நிலனுமெய்தி* அருந்தவம் செய்தவந்நாள் *
சத்திய விரதம் செல்வாய் என்ற* ஓருரையின் சார்வால் *
அத்திசை சென்றழைத்து* அங்கமரர் இல்லெடுப்பான் தன்னை *
உத்திரவேதி செய்யென்று* உரையணங்கிறை யுரைத்தான்.

9:
உத்தம வமர்த் தலம் அமைத்ததோர் எழில்தனு* உய்த்த கணையால் *
அத்திரவரக்கன் முடி பத்தும் ஒரு கொத்தென* உதிர்த்த திறலோன் *
மத்துறு மிகுத்த தயிர் மொய்த்த வெணெய் வைத்த துணும்* அத்தனிடமாம் *
அத்திகிரி பத்தர் வினை தொத்தற அறுக்கும்* அணி அத்திகிரியே.

10:
திண்மணிகள் பொன்னுடனே சேர்தலாலும் *
 சிதையாத நூல் வழியில் சேர்த்தியாலும் *
வண்மையெழும் ஈரிரண்டு வருணத்தாலும் *
 வானவர்க்கும் வியப்பான வகுப்பினுலும் *
ஒண்மையுடைய வாசி விளியோசையாலும் *
 ஒருகாலும் அழியாத அழகினுலும் *
மண்மகளார்க்கு அலங்காரமென்ன * மன்னு –
 மதிள் கச்சி நகர் கண்டு மகிழ்ந்திட்டானே.

11:
காமங்கள் பல கொண்ட வேதங்கொண்டு *
 கைதவமே செய்வார்க்குக் காணகில்லாப் *
பூமங்கை கேள்வனை நான் கண்டு போற்றப் *
 புண்ணியத்தில் நிகரில்லா விரதம் பூண்டேன் *
சாமங்கள் கழிவதன் முன் சடக்கெனப்போய்த் *
 தன்னுற்றில் தனி இருந்து தவம் செய்கின்ற *
நாமங்கை வந்திட நீ அழைப்பாய் என்று *
 நன்மகனை நான்முகன்தான் நவின்றிட்டானே.

12:
அன்ன வடிவாள் அசையும், அன்ன நடையாள் உயரும்,அன்ன அரசு ஏறிவருவாள் *
அத்தன் அயன் அத்தன் அயன், உத்தி தனை அத்திதென,உத்தி புரியாள் *
நன்னடை விடா நடம், இதென்ன நடவா நடுவு நண்ணு,குவடேறி இழிவாள் *
நற்பதிகள், அற்பதிகள், கற்புரள அற்புத,மருக்கதியினுல் **

மெய்விரத மான்மியம்

கன்னடை விடா, இடமில் உன்ன திசிருவிகட மன்னு கிரி கூடம் இடியக் *
கட்டவிடை, இற்று விழ முற்றும் விழி,உற்றுடைய விட்டு அருகுற *
அன்னனய சீர் அயன், இது என்னென,விழாவமரர், மன்னு பதியேறி மகிழ *
அச்சுதன் அணைத் தனுவில் அத்திசை, வரத்தகைய அற்று அணுகினுள்.

13:
அன்று நயந்த* அயமேத மா வேள்வி *
பொன்ற உரையணங்கு பூம்புனலாய்க் * கன்றிவர–
ஆதி அயனுக்கு* அருள் செய்தணையானுன் *
தாதை அரவணையான் தான்.

14:
தரணியில் மன்னி அயனுர்* தனித் தவம் காத்தபிரான் *
கருணையெனும் கடலாடித்* திருவணை கண்டதற் பின் *
திரள் நரகெண்ணிய* சித்திரகுத்தன் தெரித்து வைத்த *
சுருணையிலேறிய* சூழ்வினை முற்றும் துறந்தனமே.

15:
சுகலேசம் எண்ணிய* சூழ்வினை தீர்க்கத் துணிந்து அயனுர் *
அகலாத அன்புடன் கொண்ட* அயமேத வேதியின்மேல் *
புகலோங்கு பொன்மலையன்ன ஓர்* புண்ணிய கோடியுடன் *
பகலோன் பகல் விளக்காகப்* பரஞ்சுடர் தோன்றியதே.

16:
பெருமையுடை அத்திகிரிப் பெருமாள் வந்தார் *
பேராத அருள் பொழியும் பெருமாள் வந்தார் *
அருமறையின் உச்சிதனில் நின்ருர் வந்தார் *
அங்கமுடன் அவையாகும் அரியோர் வந்தார் *
திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் வந்தார் *
திருவருளால் செழுங்கலைகள் தந்தார் வந்தார் *
மருவலர்க்கு மயக்குரைக்கும் மாயோர் வந்தார் *
வானேற வழிதந்தார் வந்தார் தாமே.

17:
அத்திகிரி அருளாளப் பெருமாள் வந்தார் *
ஆனைபரி தேரின்மேல் அழகர் வந்தார் *
கச்சிதனில் கண் கொடுக்கும் பெருமாள் வந்தார் *
கருத வரந்தரும் தெய்வப் பெருமாள் வந்தார் *
முத்திமழை பொழியும் முகில் வண்ணர் வந்தார் *
மூலமென வோலமிட வல்லார் வந்தார் *
உத்தர வேதிக்குள்ளே உதித்தார் வந்தார் *
உம்பர்தொழும் கழலுடையார் வந்தார்தாமே.

18:##
இரு பரிதி ஏய்ந்த மகுடமும் * எழில் மதி திகழ்ந்த வதனமும் *
இருவகை இலங்கு குழைகளில் * எதிர் பொர உகந்த மகரமும் *
ஒரு தக உயர்ந்த திருமகள்* ஒளி மறுவி மன்னும் அகலமும் *

மெய்விரத மான்மியம்

உரு அரு உமிழ்ந்த உதரமும் * உலகடைய நின்ற கழல்களும்**
(1 கோஷ்டி)

மருவினிடை பொங்கு புனலென * மலை குனிய நின்ற மலையென *
மருளற விளங்கும் ஒளியென * மலர் அயனுகந்த பயனென *
அருவில் உறைகின்ற உயிரென * அடியவர் உகந்த அமுதென *
அருமறைகள் ஒன்றி அடிதொழ * அருள் வரதர் நின்ற பெருமையே. (2)

19:
சித்தசித்தென விரித்துரைத்தன,அனைத்தமைத்து உறையும் இறைவனர் *
சிறிய பெரிய உருவுடைய உடலமென, நடலம் இலது இலகு நிலையினர் *

சித்திரத் தொழிலை ஒத்த பத்தரொடு, முத்தர் பித்தியெனும் உணர்வினர் *
சிதைவில் மறைநெறியில் எறிய உருமுறைகள், முறிய சிறை அரிய நிறைவினர் *

கத்து விக்க வல கத்து வித்தை வழி, கற்றவர்க்கு அசைவில் மறையினர் *
கபிலர் கண சரணர் சுகதர் சமணர் அரர், வழிகள் அழியம் அருள் மொழியினர் *
(1 கோஷ்டி)

கத்திலக்கிலும் அருக் குலத்திலும், அசித்தில் ஒக்குமொரு முதல்வனர் *
கரணம் இடுகடிய பதினேர் இருடிகமும், அடைய முடியும் அடி இருடியார் **

ஒத்து அனைத்து உலகும் ஒற்றி ஒற்றிவரும், இப்பவத் திசையும் இசைவினர் *
உருவம் அருவமெனும் உலகின் முடுகு இலதில், உவமை இலது இலகு தலைவனர் *

உத்தமப் படி வகுத்த வித்தைகளில்,உத்தரிக்க உணர் குணவனர் *
உரிய கிரிசைகளில் அரியதொரு விரகு,தெரிய விரையும் அவர் பரிவினர் *

சத்து அசத்தெனும் அனைத்து அணைத்த வினை,தொத்து அறுக்க வல துணிவினர் *
சரியுமளவில் உரியவரை அறிவு அரிய,தமனி நெறி செருகு விரகினர் *

தத்துவத் திரள் உதைத்து உதைத்து அடைவு,தத்துவிக்கும் அவர் தலைவனர் *
தருகை உணருமவர் சரணம் அணுகவிடல், அரிய அருள் வரதர் அடியமே.

20:
திருமகள் மண்மகள் நீளை முதலா * எல்லாத்
தேவியரும் தன்னுடனே திகழ்ந்து நிற்கத் *
தருமமிரு மூன்று முதலனைத்தும் தோன்றத் *
தன்னனைய சூரியர் தன்னடிக் கீழ் வாழ *
அருமறை சேர் அளவில்லா அவனியின் கண் *
அரவணை மேல் வீற்றிருப்பான் அனைத்துங் காக்கும் *
கருமணியைக் கரிகிரி மேல் கண்டேன் * என்தன்
கடுவினைகள் அனைத்தும் நான் கண்டிலேனே.

21:
பெடை இரண்டை ஓரனம் அடைந்து, பிரிந்திடா வகை பேசலாம் *
பெருகும் அருவிகள் அருகு மருவிய, பெரிய மணிவரை பயிலலாம் *

மெய்விரத மான்மியம்

பிடி இரண்டொடு களவம் ஒன்று, பிணைந்த பேரழகு ஓதலாம் *
பிரிவில் ஒளியொடு நிழலும் அருகுறும், இரவி இலகுதல் பரவலாம் **
(1 கோஷ்டி)
கொடி இரண்டொடு விடவியொன்று, குளிர்ந்தவாறு குலாவலாம் *
குறைவில் சுருதியும் நினைவும் இலகிய, தரும அரு நிலை என்னலாம் *

அடி இரண்டையும் அடையும் அன்பர், அறிந்த பேரருளாளனர் *
அணுகு மலர் மகள், அவனி மகளொடு, கரடி கிரியினில் அவிர்தலே. *

22:
வேரொப்பார் விண் முதலாங் காவுக் கெல்லாம் *
விழியொப்பார் வேதமெனும் கண் தனக்குக் *
காரொப்பார் கருணைமழை பொழியு நீரால் *
கடலொப்பார் கண்டிடினும் காணக் கூத்தால் *
நீரொப்பார் நிலமளிக்கும் தன்மை தன்னல் *
நிலமொப்பார் நெடும் பிழைகள் பொறுக்கு நேரால் *
ஆரொப்பாரிவர் குணங்கள் அனைத்துங் கண்டால் *
அருளாளர் தாம் எனினும் தமக்கு ஒவ்வாரே.

23:
எந்நிலமும் குரத்தால்* குறிசெய்த எழில் பரி கொண்டு *
அன்னமுயர்த்த செய்யோன்* அன்று வேள்வி செய் வேதியின் மேல் *
முன்னிலையாகிய மூர்த்தியுடன்* நான்முகன் மற்றுமுனக்கு *
என்ன வரன் தருவோமென்று* நாதன் இயம்பினனே.

24:
சென்று மலர்பறித்து* என்னுதன் சேவடிப் போதுகந்து *
நன்றெனு நீர்சுடர்* நன்முக வாசமிலை கொடுத்துக் *
கன்னல் இலட்டுவத்தோடு* அன்னஞ் சீடை கறிபடைத்துப் *
பின்னும் செவித்து அவன் பாதம்* பணிமின்கள் என்றனனே.

25:
ஆழிநிலை வினைகடிவான்* அயமேத முடித்த தற்பின் *
வேழமலை நாயகனர்* விடை கொடுக்க விண்ணேறி *
நாழிகையில் வானவரை* மாற்றியிடு நானமுமகன்தான் *
ஊழியொலாம் அழியாத* உயோகம் அடைந்திருந்தானே.

26:
ஆதி உகத்தயன் கண்டிட நின்ற* அருள்வரதர் *
காதலுயர்ந்த களிற்றைத்* திரேதையில் காத்தளித்து *
வாதுயர் தேவ குருவுக்கிரங்கித்* துவாபரத்தில் *
சோதி அனந்தன்* கலியில் தொழுதெழ நின்றனரே.

27:##
புண்டரீகம் உயிர்த்த புராணனர் *
பொய்யில் மாமக உத்தர வேதியில் *

மெய்விரத மான்மியம்

கொண்டல் ஆர் அருள் மாரி பொழிந்திட *
கொண்டது ஓர் உயர் கூர் மதியன்பினுல் *
பண்டை நான் மறை மௌலி படிந்தயான் *
பாரில் மெய்விரதக் கவி பாடினேன் *
தொண்டை மண்டல வேதியர் வாழவே *
தூய தென்மறை வல்லவர் வாழவே. (2)

28:##
உய் விரதம் ஒன்றின்றி அடைந்தார் உய்ய *
ஒரு விரதந்தான் கொண்ட உயர்ந்த மாலைச் *
செய் விரதம் ஒன்ருலும் தெளியகில்லச் *
சிந்தையினுல் திசை படைத்த திசை முகன்தான் *
பொய்விரத நிலமெல்லாம் போயே மீண்டு *
புகலிதுவே புண்ணியத்துக்கென்று சேர்ந்த *
மெய்விரத நன்னிலத்து மேன்மையேத்தி *
வேதாந்த வாசிரியன் விளங்கினுனே (2)

29:##
சீராரும் தூப்புல்* திருவேங்கடமுடையான் *
தாரர் அருளாளர் தாள் நயந்து * சீராக–
மெய்விரத நன்னிலத்து* மேன்மையிது மொழிந்தான் *
கையில் கனிபோலக் கண்டு. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: